. 4 பக்கங்கள் . விலை ரூ. 5




தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936




www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 26.03.2026 • மலர் 04 • இதழ்: 84 • Edition : Nagercoil • 26.03.2026 • Vol : 04 • Issue : 84 • Page : 4 • Rs. 5/-

### சட்டசபை தேர்தலில்

# 175 இடங்களில் களம் காணும் உதயசூரியன்

## முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, மார்ச். 26

தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு 28, தே.மு.தி.க.வுக்கு 10, விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு 8, இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு 5, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு 5, ம.தி.மு.க.வுக்கு 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு 2, மனிதநேய மக்கள் கட்சிக்கு 2, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கு 2 என தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒருசில சிறிய கட்சிகளுக்கும் தலா 1 தொகுதிகள் கொடுக்கப்படும் என்று தெரிகிறது.

26 கட்சிகளுடன் மெகா கூட்டணி அமைத்துள்ள தி.மு.க.வில், தொகுதி பங்கீடு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. யார் யாருக்கு எந்தெந்த தொகுதிகள் என்பது தற்போது அடையாளம் காணப்பட்டு வருகின்றன. தி.மு.க. கூட்டணியில் இதுவரை கூட்டணி கட்சிகளுக்கு 66 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. குறைந்தது 165 தொகுதிகளில் தி.மு.க. நேரடியாக போட்டியிடும் என்றாலும், கூட்டணி கட்சிகள் சிலவும் தி.மு.க.வின் சின்னமான உதயசூரியனில் களம் இறங்கும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் சட்டசபை தேர்தலில் 175 இடங்களில் உதயசூரியன் களம் காண உள்ளதாக முதல்அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக திமுக தொண்டர்களுக்கு அவர் எழுதி உள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

2026 சட்டமன்றத் தேர்தல் களத்திற்கான தி.மு.க தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தோழமைக் கட்சிகளுடனான தொகுதிப் பங்கீடும், கழகத்தின் சார்பில் விருப்பமனு அளித்தவர்களுடனான நேர்காணலையும் நிறைவு செய்துவிட்டு, அன்பு உடன்பிறப்புகளாம் உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

பத்தாண்டுகால படுமோசமான அ.தி.மு.க ஆட்சியினால் தமிழ்நாட்டின் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட சீரழிவுகளைச் சரிசெய்து, கடந்த ஐந்தாண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சியை இந்திய அளவில் உயர்த்திக் காட்டியிருக்கிறோம். இந்தப் பெரும் முயற்சிக்கும் சாதனைக்கும் துணை நின்ற கொள்கைவழித் தோழமை இயக்கத்தினரின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது. அதனை மதித்து உணர்ந்தே இந்த முறையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைகள் ஜனநாயகப்பூர்வமாக நடைபெற்றன.

நமது கூட்டணியில் புதிய கட்சிகள் இணைந்துள்ளகாரணத்தால், உரிய அளவில் தொகுதிகளைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டிய சூழலும் தேவையும் இருப்பதை நம்முடன் தொடர்ந்து பயணிக்கும் தோழமைக் கட்சிகளான விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ம.தி.மு.க, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உள்ளிட்ட அனைத்து இயக்கங்களின் தலைவர்களுடனும் ஆலோசித்தே தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, ஒப்பந்தங்கள் நிறைவேறியுள்ளன.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களிடமும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் சகோதரர் தொல். திருமாவளவன் எம்.பி. அவர்களிடமும், ம.தி.மு.க பொதுச்செயலாளர் அண்ணன் வைகோ அவர்களிடமும் மற்ற இயக்கத் தலைவர்களிடமும் தொகுதிப் பங்கீட்டு நிலவரங்களை உங்களில் ஒருவனான நான் நேரில் விளக்கினேன். அவர்கள் எதிர்பார்க்கின்ற எண்ணிக்கையில் உள்ள நியாயத்தை மதித்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மகத்தான வெற்றி பெறுவதற்கேற்ப எண்ணிக்கையை நிர்ணயிக்க வேண்டிய சூழல் இருப்பதையும் அவர்களிடம் விளக்கமாகச் சொன்னேன்.

எப்போதும் என் மீது அன்பும், திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும் என்ற உறுதியும் கொண்ட நமது தோழமை இயக்கத் தலைவர்களும், தங்கள் இயக்க நிர்வாகிகளுடன் தொடர்ந்து ஆலோசித்து, உரிய அவகாசம் எடுத்துக்கொண்டு, பல சுற்று பேச்சுவார்த்தைகளுக்குப் பின் மனப்பூர்வமாக எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில்தான் தொகுதிப் பங்கீட்டு ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கூட்டணியின் தலைவர் என்ற முறையில் தோழமைக் கட்சிகளை நம்முடைய அங்கமாகத்தான் பார்க்கிறேன். அவர்களுக்கான தொகுதிகளில் முழுமையான வெற்றியை உறுதி செய்ய அவர்களின் சகோதரனாக என் உத்தரவாதத்தையும் வழங்கியிருக்கிறேன்.

தேர்தல் களத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்களுக்குத் தேவைப்படும் தொகுதிகளை உரிமையுடன் கேட்பதும், அவற்றைப் பரிசீலித்து எந்தளவுக்கு வழங்க முடியுமோ அவற்றை வழங்குவதும் கூட்டணிக்கான நடைமுறையாகும். அதனை ஜனநாயகத்தன்மையுடன் நிறைவேற்றியிருக்கிறது தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி.

கழகக் கூட்டணியின் வெற்றியே பெரிது என்பதை எடுத்துரைத்து மக்கள் நீதி மய்யத்தின் தலைவரான நண்பர் கமல்ஹாசன் எம்.பி., அவர்கள் தனது மனம் திறந்து வெளியிட்டிருக்கும் அறிக்கையை மனதார வரவேற்கிறேன். அதுபோலவே விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள், ம.தி.மு.க. உள்ளிட்ட தோழமைக் கட்சித் தலைவர்களும் மனப்பூர்வமாகத் தெரிவித்திருக்கும் கருத்துகள், 2019 முதல் தொடர்ந்திடும் நமது கூட்டணியின் வலிமைக்குச் சான்றாகும்.

தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் மதவாத அரசியலைத் துணிவுடன் எதிர்த்து நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தோளோடு தோள் நிற்பவை நம் தோழமை இயக்கங்கள். மதச்சார்பின்மை மாநில உரிமை – சமூகநீதி சமத்துவம் இவற்றை அடித்தளமாகக் கொண்ட கொள்கைக் கூட்டணிதான் நம்முடையது. அதில் ஏதாவது விரிசல் ஏற்படாதா, பிளவு உருவாகாதா, தி.மு.க. கூட்டணியின் வெற்றியைத் தடுத்திட வழி ஏற்படாதா என நினைத்த சதிகாரர்களின் எண்ணங்கள் தவிடுபொடியானதால், தி.மு.க கூட்டணியின் தொகுதிப் பங்கீடு குறித்து தங்கள் கற்பனைக்கேற்ப விமர்சனங்களைப் பரப்பிட முயற்சி செய்கிறார்கள். திசைதிருப்ப நினைக்கும் வதந்திகளை உடன்பிறப்புகள் கண்டுகொள்ளாமல் புறக்கணித்து, தோழமைக் கட்சியினருடன் இணைந்து களத்தில் பணியாற்றி, வெற்றியை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைகளைக் கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்ட குழு நடத்தி வந்த நிலையில், தி.மு.க.வின் சார்பில் தேர்தல் களத்தில் போட்டியிட விருப்பமனு அளித்திருந்த ஆயிரக்கணக்கான உடன்பிறப்புகளை ஒவ்வொரு நாளும் சந்தித்து, நேர்காணலையும் நடத்தி முடித்திருக்கிறேன். மார்ச் 17ஆம் தேதி தொடங்கி, 23ஆம் தேதிவரை, இடையில் ரமலான் திருநாள் விடுமுறை தவிர்த்து, 6 நாட்கள் இந்த நேர்காணல் நடைபெற்றுள்ளது.

கழகத்தின் நேர்காணல் என்பது தலைமைக்கும் தொண்டர்களுக்குமான உறவின் வெளிப்பாடு. அதுவும் இந்த முறை 16 ஆயிரத்து 500 உடன்பிறப்புகள் கலந்துகொண்ட கொள்கை உறவுத் திருவிழா. மாரத்தான் ஓட்டத்தைப்போல ஒவ்வொரு நாளும் 10 மணிநேரத்திற்குக் குறையாமல் நேர்காணல் நடைபெற்றது. விருப்பமனு அளித்த உடன்பிறப்புகளின் முகம் கண்டபோது எனக்குள் ஏற்பட்ட உற்சாகத்தினால் அடுத்தடுத்த நாட்களும் தொடர்ந்து ஊக்கமுடன் பணியாற்ற முடிந்தது.

நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களும் இனமானப் பேராசிரியர் அவர்களும் விருப்பமனு அளித்த ஒவ்வொரு உடன்பிறப்பையும் தனித்தனியாக அழைத்து நேர்காணல் நடத்திய தேர்தல்கள் உண்டு. அதன்பிறகு, மாவட்டங்களுக்குட்பட்ட தொகுதிகளைச் சேர்ந்த அனைவரையும் ஒன்றாகஅழைத்து, மொத்தமாக நேர்காணல் செய்ததும் உண்டு. இந்த முறை, ஒவ்வொரு தொகுதிவாரியாக விருப்பமனு அளித்தவர்களை அழைத்து நேர்காணல் நடைபெற்றது.

உடன்பிறப்புகள் தங்கள் வாழ்த்துகளை எனக்குத் தெரிவித்தனர். உடன்பிறப்புகளின் உழைப்பையும் அனுபவத்தையும் மதித்து உங்களில் ஒருவனான நான் நேர்காணல்நடத்தினேன். திராவிட மாடல் அரசின் சாதனைகள் மக்களிடம் ஏற்படுத்தியிருக்கும் நல்விளைவுகள், அதனால் பெருகியிருக்கும் பொது மக்களின் ஆதரவு, தோழமைக் கட்சிகளின் பலம், கழக நிர்வாகிகளின் ஒருங்கிணைந்த பணி இவை குறித்து அவர்களிடம் கேட்டறிந்தேன்.

அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கழகத் தலைமை நிர்வாகிகள் முன் தங்களுக்கான நேர்காணல் 'சீட்' ஒதுக்கப்பட்டிருந்ததில் விருப்பமனு செய்திருந்த ஒவ்வொரு தொகுதி உடன்பிறப்புகளும் மகிழ்ச்சி அடைந்தனர். அவர்களிடம், "உங்கள் தொகுதியில் தலைமை யாருக்கு சீட் கொடுத்தாலும் நீங்கள் இதே மகிழ்ச்சியுடன் களத்தில் பணியாற்ற வேண்டும்" என்று கழகத் தலைவர் என்ற முறையில் தெரிவித்தேன். தோழமைக் கட்சிகளுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகளும் தி.மு.க.வின் தொகுதிகள் தான் என்பதால், 234 தொகுதிகளிலும், இந்த மு.க.ஸ்டாலின்தான் நிற்கிறேன் என்ற உணர்வுடன் வேலை செய்ய வேண்டும் என்று சொன்னபோது, உடன்பிறப்புகள் அனைவரும், வெற்றி ஒன்றுதான் எங்கள் இலக்கு என்ற உறுதியை அளித்தனர்.

உடன்பிறப்புகள் தந்த உறுதியில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. தமிழ்நாட்டு மக்களிடமும் தி.மு.க தலைமையிலான கூட்டணிக்குப் பெரும் செல்வாக்கு இருக்கிறது. நம்பிக்கையும் செல்வாக்கும் வெற்றியாக விளைவதற்கு நாம் அடுத்த 4 வாரங்களும் அயராமல் உழைத்திட வேண்டும். மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தொகுதிப் பங்கீட்டு நிறைவில், தங்கள் கட்சி சின்னத்தில் போட்டியிடும் தோழமைக் கட்சிகளின் தொகுதிகள் போக, தி.மு.க வேட்பாளர்கள் மற்றும் தி.மு.க. சின்னத்தில் போட்டியிடும் தோழமைக் கட்சி வேட்பாளர்களுமாக இணைந்து 2026 சட்டமன்றத் தேர்தல் களத்தில், 175 இடங்களில் உதயசூரியன் களம் காண்கிறது.

உதயசூரியனும் நமது சின்னம்தான். கை, முரசு, கதிர் அரிவாள், அரிவாள் சுத்தி நட்சத்திரம், பானை, ஏணி ஆகியவையும் நமது சின்னங்கள்தான். 234 தொகுதிகளும் நம்முடைய தொகுதிகள்தான். மதவாத அரசியலையும், தமிழ்நாட்டை வஞ்சிக்கும் துரோகத்தையும் எதிர்த்து நின்று, எல்லார்க்கும் எல்லாம் என்கிற ஆட்சி தொடர்ந்திடவும், இந்தியாவின் ஜனநாயகத்தைக் காத்திடவும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கான வெற்றிக் களத்தில் தோழமைக் கட்சிகளுடன் இணைந்து நின்று, விரைந்து பணியாற்றுவீர். கவனம் சிதறாது இலக்கை வெல்வோம்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




### பரபரப்பாகும் தேர்தல் களம்:

## நாளை நடைபெறுகிறது த.வெ.க. வேட்பாளர் அறிமுக கூட்டம்



சென்னை, மார்ச். 26

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம்23ந்தேதிநடைபெறஉள்ளதை முன்னிட்டு, அதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 30ந் தேதி தொடங்க இருக்கிறது. சட்டசபை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெற்று, அதே நாளில் தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க., அ.தி.மு.க., நா.த.க. உள்பட அனைத்து கட்சிகளும் தங்களுடைய தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தி வருகின்றனர். குறிப்பாக கூட்டணி பேச்சு வார்த்தை, தொகுதி பங்கீடு விவகாரம், தேர்தல் பிரச்சாரம், தேர்தல் வாக்குறுதிகள் உள்ளிட்டவற்றில் அனைத்து கட்சிகளும் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் இந்த முறை நான்கு முனைப் போட்டி நிலவுவதாக கூறப்படுகிறது. இதன்படி தி.மு.க., அ.தி.மு.க., நாம் தமிழர் கட்சி மற்றும் 2026 சட்டசபை தேர்தலில் புதிதாக களம் காண இருக்கும் தமிழக வெற்றிக் கழகம் ஆகிய கட்சிகள் போட்டியிட இருக்கிறது.கூட்டணிஅமைப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் பலன் அளிக்காததால், அடுத்தகட்ட நகர்வை நோக்கி த.வெ.க. பயணிக்க தொடங்கியுள்ளது.

234 தொகுதிகளுக்கும் இன்னும் வேட்பாளர்கள் அறிவிக்கப்படவில்லை என்றாலும், அக்கட்சியின் தலைவர் விஜய், வடசென்னையில் உள்ள பெரம்பூர் தொகுதியில் போட்டியிட இருப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் நாளை மறுநாள் (மார்ச் 27ம் தேதி) மாமல்லபுரத்தில் த.வெ.க. வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் நடைபெற உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதில் . த.வெ.க. வேட்பாளர்களை மேடையில் அறிமுகம் செய்து அக்கட்சியின் தலைவர் விஜய் பேச உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 110 வேட்பாளர்களை விஜய் அறிமுகப்படுத்த உள்ளதாக கூறப்படுகிறது. 60க்கும் மேற்பட்ட தொகுதிகளுக்கான வேட்பாளர்களை தேர்வு செய்வதில் இழுபறி நீடித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

## சிகிச்சைக்கு பணம் கொண்டு சென்றால் வாட்ஸ்அப் ஆதாரம் போதும்

### அர்ச்சனா பட்நாயக் அறிவிப்பு

சென்னை, மார்ச். 26

தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக ஏப்ரல் 23ந் தேதி சட்டசபை தேர்தல் நடக்கிறது. வேட்புமனு தாக்கல் வருகிற 30ந் தேதி தொடங்குகிறது. ஓட்டு எண்ணிக்கை மே 4ந் தேதி நடக்கிறது. தேர்தல் நடத்தை விதிகள் அமலானதை தொடர்ந்து வாகன சோதனை கள் தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும்போது அரசு, அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் அனைத்து நடவடிக்கைகளிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி பொதுமக்கள் யாரும் தேர்தல் நடவடிக்கைகள் முடியும்வரை அதாவது வரும் மே 6ந் தேதிவரை தனிநபராக ரூ.50 ஆயிரத்துக்கு மேல் தொகையை எடுத்துச் செல்ல முடியாது.

அப்படி கொண்டு செல்வதாக இருந்தால், அதற்கான ஆதாரங்களை கையில் வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் பறக்கும்படையினர் அந்தத் தொகையை பறிமுதல் செய்து வருகின்றனர்.

உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ரூ.151.93 கோடி மதிப்பிலான ரொக்கம் மற்றும் தங்கம், வெள்ளி, இலவச பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. அவற்றில் தங்கம், வெள்ளி ஆகியவற்றின் மதிப்பு மட்டும் ரூ.92.02 கோடியாகும். ரூ.72 லட்சம் மதிப்புள்ள மதுபானங்களும் பிடிபட்டுள்ளன. தேர்தல் நடத்தை விதிகளால் பணம் கொண்டு செல்வதில் மக்கள் இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

இந்தநிலையில், மருத்துவசிகிச்சைக்கு எடுத்துச்செல்லப்பட்ட பணம் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்கள்சந்திப்பில்கூறியதாவது:

மக்களை தொல்லை செய்யக்கூடாது என பறக்கும் படைக்கு அறிவுறுத்தல் அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கொண்டு செல்லும் பணத்தை பறிமுதல் செய்யக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவக் காரணத்திற்காக பொதுமக்கள் ரூ.50,000க்கு மேல் பணம் எடுத்துச் சென்றால் அதற்கான ஆதாரத்தை வாட்ஸ் அப்பில் கூட காண்பிக்கலாம்; அவ்வாறு காண்பித்தால் பணம் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவர்.

ரூ.50,000க்கு மேல் அனுமதிக்கவேண்டும் என்ற வணிகர்களின் கோரிக்கையை தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். நகர்ப்புற பகுதிகளில் வாக்குப்பதிவை அதிகரிக்க தேர்தல் ஆணையம் பல்வேறு முயற்சிகளை எடுக்கிறது; தமிழகத்தில் எப்போதும் நகர்ப்புறங்களில் வாக்குப்பதிவும் மிகக் குறைவாகவே இருக்கிறது. வெறுப்பு பிரசாரங்களை கண்காணிக்க பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.




தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

### தேரூர் பேரூராட்சியில்

# வாக்குரிமை பெற்ற அனைவரும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வாக்காளர்களுக்கு முறையான விழிப்புணர்வு நிகழ்ச்சி



கன்னியாகுமரி, மார்ச். 26

சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுவதை ஒட்டி கன்னியாகுமரி சட்டப்பேரவை தொகுதியில் உள்ள தேரூர் பேரூராட்சியில் வாக்குரிமை பெற்ற அனைவரும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வாக்காளர்களுக்கு முறையான கல்வி அறிவு வழங்கப்பட்டு அதன் மூலம் தேர்தலில் பங்கேற்பு செய்வதற்காக பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தேரூர் பேரூராட்சியில் ஐந்து இடங்களில் அனைத்து வாக்காளர்களும் வாக்களிக்கும் விதத்தில் எட்டு வாக்குச்சாவடிகள் உள்ளன. மேற்கண்ட எட்டு வாக்குச்சாவடிகளிலும் மொத்தம் 6219 வாக்காளர்கள் உள்ளனர். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 100% வாக்களிக்க வேண்டும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த தேரூர் பேரூராட்சியில் செயல் அலுவலர் சங்கர சுப்பிரமணியன் மேற்பார்வையில் கோலமிடப்பட்டது. அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று பேரூராட்சி மன்ற பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள், டெங்கு மஸ்தூர் பணியாளர்கள், பரப்புரையளர்கள் மற்றும் பொது மக்கள் உறுதிமொழி எடுத்தனர். இதில் இளநிலை உதவியாளர் பிரைட் பாத்திமா சுபித்ரா, வரித்தண்டலர் புஷ்பவல்லி மற்றும் பேரூராட்சி பணியாளர்கள் பொது மக்கள்கலந்து கொண்டனர் .

# ஈரோடு பெரிய அக்ரகாரத்தில் புதிய மாட்டு சந்தை



ஈரோடு மார்ச் 26

ஈரோடு பெரிய அக்ரகாரம் பவானி மெயின் ரோட்டில் புதிய மாட்டு சந்தை தொடங்கப்படுகிறது இந்த மாட்டு சந்தை வருகிற 1 ந் தேதி முதல் செயல் பட உள்ளது .

இந்த மாட்டு சந்தைக்கு தொடக்கத்தில் பல்வேறு இடங்களில் இருந்து சுமார் 1000 க்கும் மேற்பட்ட மாடுகள் வரும் என்றும் ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் வியாழக்கிழமை ஆகிய 2 நாட்கள் நடக்கும் இந்த மாட்டு சந்தையில் பிரத்யேகமாக விவசாயிகள் அதிக அளவில் கலந்து கொள்வார்கள் என்று நிர்வாகி சிவகுமார் கூறினார்.

இது பற்றி அவர் மேலும் கூறியதாவது 12 ஏக்கர் பரப்பளவில் இந்த மாட்டு சந்தை நடைபெறுகிறது. மாடுகளை கொண்டு வரும் வியாபாரிகள் விவசாயிகள் பாதுகாப்பாக தங்குவதற்கும் அவர்கள் கொண்டு வரும் பணத்துக்கும் பாதுகாப்பான இடமாக இந்த இடம் அமைந்துள்ளது. இங்கு கொண்டு வரப்படும் மாடுகளை பரிசோதிக்க கால்நடை டாக்டர்கள் வருகிறார்கள். பள்ளிக்கூடங்கள் வழிபாட்டு தலங்கள் மற்றும் பொது மக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாமலும் அரசின் விதிகளுக்கு உட்பட்டு ம் இந்த கால்நடை சந்தை நடக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது நாச்சிமுத்து கார்த்திகேயன் செல்வம் ஆகியோர் உடன் இருந்தனர்.

### ஈரோடு நசியனூரில்

# பாங்க் ஆப் மகாராஷ்டிரா திறப்பு விழா



ஈரோடு மார்ச் 26

ஈரோடு வில்லர சம்பட்டி வசந்தம் நகரில் பாங்க் ஆப் மகாராஷ்டிரா வங்கியின் கிளை திறப்பு விழா நடைபெற்றது. இதில் தமிழ் நாடு பெடரேசன் டிரேடர்ஸ் அசோசியேஷன் மாநில துணை தலைவர் திருமூர்த்தி பழனிசாமி கலந்து கொண்டு புதிய பாங்கி கிளையை திறந்து வைத்தார். கோவை மண்டல மேலாளர் பாலாஜி முன்னிலை வகித்தார். முன்னதாக கிளை மேலாளர் பவித்ரா வரவேற்றார். இதில் ஏராளமான வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர். இந்த வங்கியில் வீட்டுக் கடன் வாகன கடன் தங்க நகை கடன் தனி நபர் கடன் கல்வி கடன் சோலார் பேனல் கடன் போன்றவை வழங்கப்படும் என்றும் வைப்பு தொகைகளுக்கு கூடுதல் வட்டி வழங்கப்படும் என்றும் மண்டல மேலாளர் பாலாஜி கூறினார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தேர்தலில் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தைஉணர்த்தும்வகையில்,வீட்டுபயன்பாட்டிற்கானஎரிவாயுஉருளையில் "ஏப்ரல் 23 அன்று 100% தவறாமல் வாக்களிப்போம், என் வாக்கு விற்பனைக்கு அல்ல" என்ற உறுதிமொழி அடங்கிய ஒட்டு வில்லைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் ஸ்டிக்கர் ஒட்டி, விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# தபால் வாக்கு பதிவு செய்ய வாக்காளர் அடையாள அட்டை அவசியம்; கலெக்டர் அறிவுறுத்தல்



நாகர்கோவில், மார்ச்.26

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளுக்கான பொதுத்தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் 23ம் தேதி நடைபெறுவதையொட்டி, இதுகுறித்து கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகு மீனா தனது செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: .

குமரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் 15,10,500 வாக்காளர்கள் 1914 வாக்குச்சாடி மையங்களில் வாக்களிக்க உள்ளார்கள். தேர்தல் நடத்துவதற்கான அனைத்து பணிகளும் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. அதன்ஒருபகுதியாக வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ள ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான முதற்கட்ட பயிற்சியானது 28.03.2026 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது.

கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ளவர்களுக்கு நாகர்கோவில் (ஆலம்பாறை) பொன்ஜெஸ்லி பொறியியல் கல்லூரியிலும், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ளவர்களுக்கு நாகர்கோவில் ஆயுத படை சாலையில் அமைந்துள்ள புனித அல்போன்ஸா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும், குளச்சல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ளவர்களுக்கு சுங்கான்கடை புனித சேவியர் கத்தோலிக்க பொறியியல் கல்லூரியிலும், பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ளவர்களுக்கு திருவட்டார் எக்ஸ்சல் சென்ட்ரல் பள்ளியிலும், விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ளவர்களுக்கு மார்த்தாண்டம் பம்பம் பகுதியில்உள்ளதிருஇருதயஇண்டர்நேஷனல் பள்ளியிலும், கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ளவர்களுக்கு கருங்கல் பெத்தலகேம் பொறியியல் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

மேல்குறிப்பிட்ட 6 இடங்களில் நடைபெறவுள்ள தேர்தல் முதற்கட்ட பயிற்சியில் சுமார் 9000க்கும் அதிகமானவர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள். எனவே வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ள ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தங்கள் ஜனநாயக கடமையினை ஆற்றும் வகையில் பயிற்சி வரும்பொழுது தங்களது வாக்காளர் அடையாள அட்டை தவறாமல் எடுத்து வந்து, படிவம் 12டி பெற்று, உங்களுடைய தபால் வாக்குகளை பதிவுசெய்து, கன்னியாகுமரி மாவட்டம் வாக்களிப்பதில் முன்னோடி மாவட்டமாக திகழ வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறியுள்ளார்.



தருமபுரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அதியமான் கோட்டை அரசு ஆண்கள் மேல் பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு தேர்தலில் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு ரோபோட் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்திய நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள்அனைவருக்கும் மரக்கன்றுகளைதேர்தல் பொது பார்வையாளர் ஹுராலால் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் சதீஷ் ஆகியோர் வழங்கினார்கள். மகளிர் திட்ட அலுவலர் சுந்தர்ராஜன், தேர்தல் நடத்தும் அலுவலர் காயத்ரி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஜோதி சந்திரா, வட்டாட்சியர் சுகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சாமி ஊர்வலத்தை தடுத்த போலீசார்

# எம் ஆர் காந்தி எம்எல்ஏ தலைமையில் பக்தர்கள் சாலையில் அமர்ந்து மறியல்

## 86 பேர் மீது போலீஸ் வழக்கு



புதுக்கடை, மார்ச். 26

புதுக்கடை அருகே அம்சி நடுதனவிளை பகுதியில் அமைந்துள்ள பத்ரேஸ்வரி அம்மன் கோவில் பங்குனி திருவிழா கடந்த 18 ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கி நடைபெற்று வந்தது. விழாவின் இறுதி நாளான நேற்று முன்தினம் மாலை அம்மன் உட்பட சாமி விக்கிரகங்கள் கோவிலில் இருந்து தேங்காப்பட்டணம் கடலில் ஆறாட்டிற்காக ஊர்வலமாக கொண்டு செல்லப் பட்டது.

ஊர்வலம் அம்சி சந்திப்பு பகுதியில் வந்தபோது போலீசார் ஊர்வலத்தை தடுத்துநிறுத்திமேளதாளசத்தம்இல்லாமல் செல்ல வற்புறுத்தி உள்ளனர். இதனால் ஆவேசமடைந்த பக்தர்கள் போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் எம் ஆர் காந்தி தலைமையில் சாமி விக்ரகங்களுடன் சாலையின் நடுவே அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் தேங்காய்பட்டணம் குழித்துறை நெடுஞ்சாலையில் கடுமையான போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இதனால் ஏராளமான அரசு பேருந்துகள் பள்ளி கல்லூரி வாகனங்கள் கடந்து செல்ல முடியாமல் நீண்ட நேரம் காத்திருந்தனர். சுமார் ஒரு மணி நேரம் நடந்த போராட்டம் பேச்சுவார்த்தைக்கு பின்போலீசார்ஊர்வலத்தைவழக்கம்போல் செல்ல அனுமதி அளித்தனர்.

இதனையடுத்து பக்தர்கள் அம்மன் விக்ரகங்களை மேள தாளங்கள் முழங்க ஊர்வலமாக தேங்காபட்டணம் கடற்கரைக்கு கொண்டு சென்று நீராடி பூஜைகள் நடத்தி மீண்டும் கோவிலுக்கு வந்துசிறப்புபூஜைகள்செய்துவழிபட்டனர்.

இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு பொது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியதாகவும், மேலும் தேர்தல் நேரத்தில் முன் அனுமதி பெறாமல் போராட்டம் நடத்தியதாகவும் புதுக்கடை போலீசார் நாகர்கோவில் எம்எல்ஏ எம் ஆர் காந்தி, ஜெகன், தினகர் உள்ளிட்ட 86 பேர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

### நாகர்கோவில் அருகே

# ஐ. டி. நிறுவன ஊழியரிடம் ரூ.50 ஆயிரம் மோசடி

## 2 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், மார்ச். 26

நாகர்கோவில் அருகே உள்ள முகிலன்விளையை சேர்ந்தவர் மேக்மோகன் வயது 52, இவர் சென்னையில் ஐ.டி. நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். இந்த நிலையில் அவர் குமரி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டிடம் ஒரு புகார் மனு கொடுத்தார்.

அதில் தான் வேலை இல்லாமல் இருந்த காலத்தில் கொல்லங்கோடு கண்ணநாகம் பகுதியை சேர்ந்த ஜாண், சதீஸ் ஆகியோர் வேலை வாங்கி தருவதாக கூறினர். அவர்களதுவார்த்தையைநம்பிரூ.50ஆயிரம்கொடுத்தேன்.

ஆனால் அவர்கள் வேலை எதுவும் வாங்கி தரவில்லை. இதனால் தான் கொடுத்த பணத்தை திருப்பி கேட்ட போது அதனையும் தர மறுத்து மோசடி செய்தனர்.அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிட்டு இருந்தார். அந்த புகார் மீது நடவடிக்கை எடுக்க போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின்அறிவுறுத்தியதை தொடர்ந்துசுசீந்திரம்போலீஸ் இன்ஸ்பெக்டர் இன்னோஸ்குமார், சப் இன்ஸ்பெக்டர் தனிஸ் லியோன் ஆகியோர் விசாரணை நடத்தி ஜாண், சதீஸ் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

### நண்பனை கொன்ற வழக்கு

# தலைமறைவாக இருந்த வாலிபர் கைது



மார்த்தாண்டம், மார்ச். 26

தமிழக கேரளம் எல்லை பகுதி கருமாரூர் பகுதியை சேர்ந்தவர்ஷிபின் . அதே பகுதியை சேர்ந்த ஜித்து என்ற சுமன் (32) மற்றும் ராகுல் என்ற ராஜேஷ் குமார் ஆகியோர் நண்பர்கள். இவர்கள் மூன்று பேரும் சேர்ந்து கடந்த 24. 12. 2016 அன்று இரவு பளுகல் போலீஸ் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள குளத்தின் கரையில் அமர்ந்து மது குடித்தனர். அப்போது ஷிபின் ஒரு மது பாட்டிலை எடுத்து மறைத்து வைத்ததாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த ஜித்து மற்றும் ராகுல் ஆகியோர் அருகில் கிடந்த கம்பால் ஷிபினை சரமாரியாக தாக்கினார். அதில் அவர் உயிரிழந்தார். உடலை அந்த பகுதியில் போட்டு விட்டு சென்று விட்டனர்.

இது தொடர்பாக பளுகல் போலீசார் வழக்கு பதிவு செய்து, இருவரும் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளியே வந்தனர். இது சம்பந்தமாக குழித்துறை கோர்ட்டில் வழக்கு நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் ஜித்து கோர்ட்டில் ஆஜராகாமல் தலைமறைவாகி இருந்து வந்துள்ளார். இதை அடுத்து அவரைப் பிடிக்கும்படி குழித்துறை கோர்ட் உத்தரவு பிறப்பித்தது. அதன்படி மார்த்தாண்டம் துணை போலீஸ் சூப்பிரண்டு நல்லசிவம் உத்தரவின் பேரில் பளுகல் போலீசார் தனிப்படை அமைத்து தமிழகம்,கேரளாஉள்ளிட்டபல்வேறுபகுதிகளில்குற்றவாளியை தேடி வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மார்த்தாண்டம் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் ஜித்து பதுங்கி இருப்பதாக போலீசருக்கு தகவல் கிடைத்தது. இதை அடுத்து போலீசார் இரவில் அந்த வீட்டை சுற்றி வளைத்து ஜித்துவை அதிரடியாக கைது செய்தனர்.

### நித்திரவிளை அருகே

# ரீலீஸ் எடுக்க மறுத்ததால் மனைவி சித்திரவதை

## கணவர் உட்பட 4 பேர் மீது வழக்கு

குளச்சல். மார்ச். 26

நித்திரவிளை அருகே உள்ள தூத்தூர் பகுதியை சேர்ந்தவர் யுஷானி (26). இவருக்கும் இனயம் பகுதியை சேர்ந்த ஏபர் காட் டைபன் ( 37) என்பவருக்கும் கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. திருமணத்துக்கு பிறகு கணவர் தென்னாப்பிரிக்காவில் வேலை பார்த்து பார்த்ததால் யுஷானியும் வெளிநாட்டில் தங்கியிருந்தார். இவர்களுக்கு ஒரு மகள் உள்ளார். இந்த நிலையில் கணவன் மனைவிக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டு, யுஷானி தனது பெற்றோர் வீட்டிற்கு வந்தார். இதை அடுத்து அவர் குழித்துறை கோர்ட்டில் ஒரு புகார் மனு தாக்கல் செய்தார். அந்த புகாரில் கூறியிருப்பதாவது:

எனக்கும் எனது கணவருக்கும் கடந்த 2023ல் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது 30 பவுன் தங்க நகையும், ரூ.5 லட்சம் ரொக்கமும் வரதட்சணையாக கொடுத்தனர். திருமணத்திற்கு பிறகு கணவர் என்னை தென்னாப்பிரிக்காவில் அழைத்துச் சென்றார். அங்கு சென்ற பிறகு போதை பொருட்கள் உபயோகப்படுத்தி என்னை துன்புறுத்த தொடங்கினார். மேலும் செல்போனில் ரீல்ஸ் எடுக்கவும் வற்புறுத்தினார்.

நானும் கணவரின் விருப்பப்படி ரீல்ஸ் எடுக்க சம்மதித்தேன்.

இதன் மூலம் வந்த பணத்தை எனக்கு தராமல் அபகரித்தார். பின்னர் மகள் பிறந்த பிறகு மேலும் ரூபாய் 10 லட்சம் வரதட்சணை வாங்கி வருமாறு கூறினார் .

இதை அடுத்து அங்கிருந்து கோவாவுக்கு நாங்கள் குடும்பத்துடன் சென்றிருந்த போது அங்கு எத்தனை ரீல்ஸ் எடுக்க வற்புறுத்தினர். நான் சம்மதிக்கிறதால் அடித்து துன்புறுத்தினார். இதற்கு எனது கணவர் குடும்பத்தினரும் உடந்தையாக இருந்தனர். மேலும் தொடர்ந்து சித்திரவதை செய்தால் குழந்தையுடன் எனது பெற்றோர் வீட்டுக்கு வந்து விட்டேன். என்னுடைய நகைகள் துணிமணிகள் உள்ளிட்ட அனைத்து பொருட்களும் கணவர் வீட்டில் தான் உள்ளன. கேட்ட பிறகு அவற்றை தர மறுக்கிறார்கள். எனவே இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். என புகாரில் கூறியிருந்தார்,

இந்த புகார் மனு மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த குழித்துறை கோர்ட் உத்தரவிட்டது.

அதன் பேரில் குளச்சல் அனைத்து மகளிர் இன்ஸ்பெக்டர் லட்சுமி பிரபா விசாரணை நடத்தி யுஷானியின் கணவர் மற்றும் அவரது குடும்பத்தின் உட்பட நான்கு பேர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

குளச்சல், பத்மநாபபுரம் தொகுதியில்

# பதற்றமான வாக்குச்சாவடிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு



நாகர்கோவில், மார்ச்.26

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு வரும் ஏப்ரல் 23 அன்று பொதுத்தேர்தல் நடைபெறுவதையொட்டி குளச்சல் மற்றும் பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பதற்றமான வாக்குச்சாவடிகளை நேற்று மாவட்ட ஆட்சியர் அழகு மீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு கூறியதாவது:

குளச்சல் சட்டமன்ற தொகுதியில் 15 வாக்குசாவடிகளும், பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதியில் 23 வாக்குச்சாவடிகளும் பதற்றமான மற்றும் கவனிக்கத்தக்க வாக்குச்சாவடிகளாக கண்டறியப்பட்டுள்ளன. அதனடிப்படையில் சம்மந்தபட்ட வாக்குச்சாவடிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குளச்சல் சட்டன்ற தொகுதிக்குட்பட்ட குறும்பனை அருகில் உள்ள சரவிளை அரசு நடுநிலைப்பள்ளி, குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இலப்பவிளை அரசு உயர்நிலைப்பள்ளி, மாடத்திட்டுவிளை புனித அலோசியஸ் தொடக்கப்பள்ளி மற்றும் பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவிதாங்கோடு அரசு தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளி, மணலிக்கரை புனித ஜோசப் தொடக்கப்பள்ளி, தக்கலை அரசு தொடக்கப்பள்ளி ஆகிய பதற்றமான வாக்குச்சாவடி மையங்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் திருவிதாங்கோடு அரசு நடுநிலைப் பள்ளியில் அமைக்கபடவுள்ள மாதிரி வாக்குச்சாவடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, அமைதியான மற்றும் நேர்மையான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் காவலர்கள், நுண் பார்வையாளர்கள் மற்றும் மத்திய பாதுகாப்புப் படையினர் பணியமர்த்தப்படுவார்கள். பதட்டமான அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கண்காணிப்பு கேமரா வசதிகள் ஏற்படுத்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்காணிக்க கட்டுப்பாட்டு அறை அமைக்கப்படும். அதனடிப்படையில் பதற்றமான வாக்குச்சாவடிகளில் வாக்காளர்கள் எந்தவொரு அச்சுறுத்தலுமின்றி வாக்களிப்பதை தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், காவலர்கள் உள்ளிட்டவர்கள் உறுதி செய்திட வேண்டும். என கூறினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுகிதா, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) கோமதி, காவல்துறையினர், தலைமையாசிரியர்கள், துறை அலுவலர்கள், காவல்துறையினர் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



முக்கடல் அணையில் நீர்மட்டம் சரிவு

# நாகர்கோவில் பகுதிக்கு தண்ணீர் பிரச்சனை ஏற்படும் அபாயம்

நாகர்கோவில், மார்ச்.26

நாகர்கோவில் மாநகர பகுதியில் உள்ள வீடுகளுக்கு முக்கடல் அணையில் இருந்து மட்டும் தண்ணீர் கொண்டு வரப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது. மாநகர பகுதி மக்களின் குடிநீர் தேவைகள் அதிகரிப்பால், தமிழக அரசு புத்தன் அணை குடிநீர் திட்டத்தை செயல்படுத்தியது.

தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் முக்கடல் அணையில் தண்ணீர் வேகமாக குறைந்து வருகிறது. தற்போது 1 அடியில் தண்ணீர் இருப்பதால், முக்கடல் அணையில் இருந்து தினமும் குறைந்த அளவே தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணாஉத்தரவின்பேரில்மாநகராட்சிஅதிகாரிகள் புத்தன் அணைக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், முக்கடல் அணையில்தற்போது 1 அடியில்தண்ணீர்கிடக்கிறது. 1 அடியின் கீழ் 20 அடி தண்ணீர் மேலும் உள்ளது. இந்த தண்ணீர் மைனஸ் 20ல் இருந்து கீழே செல்லும். தண்ணீர் குறைய குறைய அழுத்தம் குறைவாக இருக்கும்.

தற்போதுள்ள நிலையில் இன்னும் 25 நாட்கள் வரை முக்கடல் அணையில் இருந்து தண்ணீர் எடுக்கலாம். மேலும் பெருஞ்சாணி அணையில் இருந்து மே 30ம் தேதி வரை தண்ணீர் கிடைக்கும். அதனை தொடர்ந்து ஜூன் மாதம் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கும்போது, நாகர்கோவில் மாநகராட்சி பகுதிக்கு தேவையான குடிநீர் கிடைக்கும். என்றனர்.

இருதய பெருநாடி பாதிக்கப்பட்ட ஐடி ஊழியருக்கு

# பிரசாந்த் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை

சென்னை, மார்ச் 26

சமீபத்தில் 39 வயதான ஒரு ஐடி ஊழியருக்கு சுத்திகரிக்கப்பட்ட ரத்தத்தை உடல் முழுவதும் கொண்டு செல்லும் இருதய பெருநாடியில் ஏற்பட்ட பிரச்சினைக்கு சென்னை பிரசாந்த் மருத்துவமனை மருத்துவர்கள் சிறப்பான சிகிச்சை அளித்து அவரை காப்பாற்றியுள்ளனர். அவருக்கு 'டைப் ஏ அயோர்டிக் டிசெக்ஷன்' எனப்படும் இருதய பெருநாடியில் மிகவும் அரிதான பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது உயிருக்கு ஆபத்தான நிலை என்பதால், உடனடியாக அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது.

இந்த இருதய பெருநாடி சேதம் என்பது, வருடத்தில் 10 லட்சம் பேரில் 3 முதல் 4 பேருக்கு மட்டுமே வரக்கூடிய மிக அரிதான நோயாகும். இதற்கு உடனடியாக சிகிச்சை அளிக்காவிட்டால், ரத்தக்குழாய் வெடிப்பு, பக்கவாதம் மற்றும் பிற உடல் உறுப்புகள் செயலிழப்பது போன்ற மிக ஆபத்தான விளைவுகள் ஏற்படும்.

இளைஞர்கள் மத்தியில் இதுபோன்ற கடுமையான இருதய பாதிப்புகள் சமீபகாலமாக அதிகரித்து வருவதாகவும் திடீரென ஏற்படும் கடுமையான நெஞ்சுவலிக்கு உடனடியாக மருத்துவரை அணுக வேண்டிய தன் அவசியத்தையும், உயிரைக் காப்பாற்றுவதில் இருதய சிகிச்சையின் முக்கியத்துவத்தையும் மருத்துவர்கள் வலியுறுத்தினர்.

இது குறித்து இருதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். கௌசிக் கண்ணன் கூறுகையில், "இந்த நோயின் தன்மையை உடனடியாகக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பது மிகவும் அவசியம்.

'டைப் ஏ அயோர்டிக் டிசெக்ஷன்' பாதிப்பில்,

சிகிச்சை தாமதமாகும் ஒவ்வொரு நிமிடமும் உயிருக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது. இந்த நோயாளிக்கு செய்யப்பட்ட அறுவை சிகிச்சையானது, மேம்பட்ட ரத்த ஓட்ட பராமரிப்பு முறைகள் மற்றும் மிகவும் துல்லியமான முறையில் இருதயபெருநாடியைமீண்டும்சீரமைக்கும் நுட்பங்களை உள்ளடக்கியதாகும் என்றார்.

மேலும் பிரசாந்த் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர். பிரசாந்த் கிருஷ்ணா கூறுகையில்,

" உயிருக்கு ஆபத்தான நிலைமைகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து விரைந்து சிகிச்சை அளிக்க எங்கள் அவசர இருதய சிகிச்சை குழுவினர் நன்கு பயிற்சி பெற்றுள்ளனர். தேவையான அறுவை சிகிச்சை நிபுணர்கள், தீவிர சிகிச்சை வசதிகள் மற்றும் மருத்துவக் கட்டமைப்பு ஆகியவை 24 மணி நேரமும் எங்கள் மருத்துவமனையில் தயார் நிலையில் இருப்பதால் இந்த அரிய மற்றும் அதிக ஆபத்துள்ள அறுவை சிகிச்சையைச் செய்து நோயாளியின் உயிரைக் காப்பாற்றி உள்ளோம்" என்றார்.

இளைஞர்கள் மத்தியில் இதுபோன்ற கடுமையான இருதய பாதிப்புகள் சமீபகாலமாக அதிகரித்து வருவதாகவும் திடீரென ஏற்படும் கடுமையான நெஞ்சுவலிக்கு உடனடியாக மருத்துவரை அணுக வேண்டியதன் அவசியத்தையும், உயிரைக் காப்பாற்றுவதில் இருதய சிகிச்சையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினர்.

பெரியகுளத்தில்

# திமுக பிரச்சாரக் கூட்டத்தில் ஓ. பன்னீர்செல்வத்திற்கு உற்சாக வரவேற்பு!



தேனி, மார்ச். 26

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே திமுக சார்பில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில், தமிழக முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் கலந்து கொண்டது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பையும் பேசுபொருளையும் ஏற்படுத்தியுள்ளது.

நிகழ்வின் விபரங்கள்:

பெரியகுளம் எண்டபுளி புதுப்பட்டி பைபாஸ் சாலை அருகிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில், திராவிட முன்னேற்றக் கழ கத்தின் சார்பில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு வருகை தந்த முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கு திமுகவினர் சார்பில் பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

உற்சாக வரவேற்பு:

கூட்டத்திற்கு வருகை தந்த அவருக்கு: தேவராட்டம் மற்றும் மேளதாளங்கள் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது. தொண்டர்கள் உற்சாகமாக பட்டாசுகளை வெ டித்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

பங்கேற்ற முக்கிய நபர்கள்:

இந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில், தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சரவணன் மற்றும் திமுகவின் முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். அரசியல் முக்கியத்துவம்: வழக்கமாக அதிமுக மற்றும் திமுக ஆகிய கட்சிகள் அரசியல் ரீதியாக மோதிக்கொள்ளு ம் நிலையில், பெரியகுளத்தில் திமுக நடத்திய கூட்டத்தில் ஓபிஎஸ் அவர்களுக்கு அளிக்கப்பட்ட இந்த உற்சாக வரவேற்பு, தேனி மாவட்ட அரசியலில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கருதப்படுகிறது.

அன்னூர் ஒன்றியம் கணேஷ்புரம் பகுதியில்

# அதிமுக சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டம்




கோவை மார்ச்:26

கோவை மாவட்டம் அன்னூர் ஒன்றியம் கணேசபுரம் பகுதியில் அதிமுக அம்மா பேரவை சார்பில் "மக்களைத் தேடி மாற்றம் வேண்டி" தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் அன்னூர் தெற்கு ஒன்றிய செயலாளர் ஓ.எஸ்.சாய் செந்தில் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு பேச்சாளராக அதிமுக செய்தி தொடர்பாளர் கல்யாணசுந்தரம் கலந்துகொண்டு அதிமுக ஆட்சியில் இருந்தபோது செய்த திட்டங்களை சாதனைகளாக எடுத்துக்கூறியும், வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுகவை வீழ்த்தி வெற்றிவாகை சூடுவோம் என பிரச்சாரஉரையாற்றினார். இந்நிகழ்வில் உடன் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் நாசர், மாநில வர்த்தக அணி துணைதலைவர் அம்பாள்பழனிச்சாமி, வடக்கு ஒன்றிய செயலாளர் சரவணன், மாவட்ட மாணவரணி செயலாளர் கோகுல் மற்றும் அதிமுக கட்சி நிர்வாகிகள் கூட்டணி கட்சியினர் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

புளியங்குடியில்

# தனியார் பள்ளி வளாகத்திற்குள் சொகுசு கார் மோதி சிறுமி பலி

## போலீசார் தீவிர விசாரணை



தென்காசி மார்ச் 26

தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகே உள்ள நெல்கட்டும்செவல் பகுதியை சேர்ந்த மாரிசாமி வேல்மயில் தம்பதியினரின் 4 வயது குழந்தையான யாழினி ஸ்ரீ என்ற சிறுமி புளியங்குடி சிந்தாமணி பகுதியில் செயல்பட்டு வரும் கண்ணா மெட்ரிகுலேஷன் பள்ளியில் பயின்று வந்த நிலையில் பள்ளி வளாகத்திற்குள் சிறுமி மீது சொகுசு கார் மோதியதில் சிறுமி சம்பவ இடத்திலேயே பலியாகி உள்ளார்.

இந்த நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக புளியங்குடி போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வரும் நிலையில் பள்ளி வளாகத்திற்குள் சிறுமி விபத்தில் சிக்கியது எப்படி? இதில் தொடர்புடையவர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் எனக்கூறி சிறுமியின் உறவினர்கள் திருமங்கலம் கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர் சுமார் 16 மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இந்த சாலை மறியல் காரணமாக கடுமையான போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டதால் மாற்று பாதையில் போக்குவரத்து இயக்கப்பட்டன. மேலும் சிறுமியின் உறவினர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டதனால் குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை முன்வைத்தனர்

இந்த நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக புளியங்குடி போலீசார் தீவிர விசாரணை நடத்தி வரும் நிலையில் விசாரணை முடிவுக்கு பிறகு குற்றவாளி உடனடியாக கைது செய்யப்படுவான் எனவும் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனயத்தில்

# மீனவர் தூக்கிட்டு தற்கொலை

புதுக்கடை, மார்ச். 26

இனயம் கடற்கரை கிராம பகுதியை சேர்ந்தவர் மரியதாசன் (61). மீனவர். இவருக்கு கிங்ஸ்லி என்ற மனைவி உள்ளார். மனைவி 2 மாதங்களாக அருகில் உள்ள தனது மகள் வீட்டில் தங்கி இருந்துள்ளார். மரியதாசன் தினமும் தனது மகள் வீட்டிற்கு சென்று சாப்பிட்டுவிட்டு, தனது வீட்டில் வந்து தங்குவது வழக்கம். மரியதாசன் மகள் வீட்டிற்கு சென்று சாப்பிட்டு விட்டு தனது வீட்டிற்கு திரும்பியுள்ளார். பின்னர் மதிய உணவுக்கு அவர் மகள் வீட்டிற்கு வரவில்லை. இதனால் சந்தேகம் அடைந்த அவரது மனைவி கிங்ஸிலி வீட்டிற்கு சென்று பார்த்துள்ளார்.

அப்போது படுக்க அறையில் கணவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார். உடனடியாக தனது மகள் மற்றும் உறவினர்கள் உதவியுடன் அவரை மீட்டு சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த டாக்டர்கள் மரியதாசன் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்த புகாரின் பேரில் புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தேர்தல் பாதுகாப்பு:

# கடமலைக்குண்டு பகுதியில் துணை ராணுவத்தினர் மற்றும் காவல்துறையினரின் கொடி அணிவகுப்பு



தேனி, மார்ச். 26

தேர்தல் நெருங்கி வருவதை முன்னிட்டு, தேனி மாவட்டம் கடமலைக்குண்டு பகுதியில் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கவும், அமைதியான சூழலை உறுதி செய்யவும் காவல்துறை மற்றும் துணை ராணுவத்தினர் இணைந்து பிரம்மாண்ட கொடி அணிவகுப்பு பேரணியை நடத்தினர்.

இந்த அணிவகுப்பை கூடுதல் துணை காவல் கண்காணிப்பாளர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அணிவகுப்பு தொடங்கும் போது உற்சாகமான ட்ரம் செட் முழக்கங்களுடன் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படை: துப்பாக்கி ஏந்திய மத்திய துணை ராணுவப் படை வீரர்கள் மற்றும் தமிழ்நாடு காவல்துறையினர் இதில் திரளாகப் பங்கேற்றனர்.

அ ணிவகுப்புப் பாதை: கடமலை க்குண்டு பகுதியில் முக்கிய வீதிகள் வழியாக சுமார் 2 கிலோமீட்டர் தூரத்திற்கு இந்த அணிவகுப்பு நடைபெற்றது. பொதுமக்களிடையே தேர்தல் குறித்த விழிப்புணர்வையும், பாதுகாப்பான உணர்வையும் ஏற்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தேர்தல் நேரத்தில் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் தடுப்பதற்கும், மக்கள் தைரியமாக வந்து தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதை உறுதிப்படுத்தவும் இந்த பாதுகாப்பு அணிவகுப்பு நடத்தப்பட்டதாகக் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# அருந்ததியர்கள்களுக்கு 14 தொகுதிகளில் வாய்ப்பளிக்க வேண்டும்

## இரா.தமிழின்பன் தலைமையில் தீர்மானம்



சென்னை, மார்ச் 26

தமிழ்நாடு அருந்ததியர் அரசியல் அதிகார உரிமை மீட்பு கூட்டியக்கம் சார்பில் 20.03.2026 சென்னையில் கலந்தலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தலில் 14 தொகுதிகளில் அருந்ததியர்கள் போட்டியிட அனைத்து கட்சிகளும் வாய்ப்பளித்திட வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விடுதலை வேங்கைகள் கட்சியின் துணைப்பொதுச் செயலாளர் வீரன் வரவேற்பில் சமூக நீதிக்கட்சி தலைவர் பன்னீர்செல்வம் தொடக்க உரையில் அருந்ததியர் விடுதலை இயக்க தலைவர் இளந்தமிழன், கொங்குநாடு திராவிட கட்சி தலைவர் பாட்டன் சக்திவேல், அருந்ததி கட்சி பொதுச் செயலாளர் தேவேந்திர ராவ், தேசிய தமிழர் கட்சி தலைவர் மாரிச்சாமி, 'சமூக விடுதலை களம் தலைவர் ராவணன் உள்ளிட்டோர் முன்னிலை வகிக்க ஒருங்கிணைப்பாளர் இரா.தமிழின்பன் தலைமை உரையாற்றினார்.

அருள்ஒளி உறவின்முறை புலவர் ஆனந்தராஜ், சமூகநீதி முன்னேற்றக் கழகம் தலைவர் மோகன் நெடுமாறன், ஜனநாயக வெற்றி கழக தலைவர் வீரப்பிரகாஷ், விடுதலை வேங்கைகள் கட்சியின் நிர்வாகிகள் சண்முகம், சாமிக்கண்ணு விடுதலை வேங்கைகள் கட்சியின் சென்னை மண்டல செயலாளர் சம்பூரணம் உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட தலைவர்கள் கலந்து கொண்டு 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும் செய்திகுறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

இத்தீர்மானங்களைதமிழகமுதல்வருக்கு தெரிவிக்கும் வகையில் தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர் எஸ் பாரதி மூலமாக அளித்தோம். மேலும் காங்கிரஸ் கட்சி தமிழ்நாடு மாநிலத்தலைவர் செல்வப்பெருந்தகை, கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி சொத்து பாதுகாப்பு குழு தலைவரான ஆர்.எம்.பழனிசாமி, தங்கபாலு ஆகியோரிடம் கொடுத்து விளக்கினோம். மேலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் எடப்பாடியாருக்கு தெரிவிக்கும் வகையில் தலைமை நிலைய நிர்வாகிகள் மகாலிங்கம், மனோகரன் ஆகியோர் மூலம் மனு அளித்தோம். மேலும் தேர்தல் ஆணைய தலைமை தேர்தல் அதிகாரியிடமும் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

### துறையூர் அருகே

## அடுத்தடுத்து தாய் மகள் சாவு



துறையூர், மார்ச். 26

துறையூர் அருகே நாகநல்லூரில் கடந்த 15ஆம் தேதி பேருந்து மோதி சமரிதா உயிரிழந்த நிலையில், சிகிச்சை பெற்று வந்த அவரது தாய் பரமேஸ்வரி நேற்று (மார்ச் 24) சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்து உப்பிலியபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த துயரச் சம்பவம்அப்பகுதியில்சோகத்தைஏற்படுத்தியுள்ளது.

### திருச்சி அருகே

## மயான பாதை ஆக்கிரமிப்பு அகற்றம்



திருச்சி, மார்ச். 26

திருச்சி போலம்பட்டி கிராமத்தில் மயானத்தையும், அதற்குச் செல்லும் பாதையையும் ஆக்கிரமித்து முள்வேலி அமைத்திருந்த பட்டாதாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாகராஜன் என்பவர் அளித்த மனுவின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர் ஆகியோரின் உத்தரவின் பேரில், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வருவாய்த்துறையினர் சர்வே எண்ணில்உள்ளஆக்கிரமிப்புகளைஅகற்றி, மயானப் பாதையைத் திறந்துவிட்டனர். இதனால் கிராம மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

### நேரகட்டுப்பாட்டை மீறிய டாரஸ் வாகனங்கள்:

## நடவடிக்கை எடுத்த கன்னியாகுமரி போக்குவரத்து போலீசார்



கன்னியாகுமரி மார்ச் 26

கன்னியாகுமரி மாவட்டத்தை விபத்தில்லா மாவட்டம் என்ற இலக்கை நோக்கி செயல்பட்டு வரும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் விதிமுறைகளை மீறும் கனிமவள வாகனங்கள் மீது கடுமையானநடவடிக்கைஎடுக்கஉத்தரவிட்டுள்ளார்.

அவரின்உத்தரவின்படிகன்னியாகுமரிஉட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் ஜெயச்சந்திரன் மேற்பார்வையில் கன்னியாகுமரி போக்குவரத்து ஆய்வாளர் தலைமையிலான உதவி ஆய்வாளர் மற்றும் போக்குவரத்து போலீசார் நடத்திய வாகன சோதனையில்,நேர கட்டுப்பாட்டை மீறியும், மது அருந்தியும், முறையான போக்குவரத்து விதிகளை பின்பற்றாமம் வந்த கனிமவள வாகனங்கள் மீது மோட்டார் வாகன சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## சட்டமன்றத் தேர்தலை புறக்கணிக்க போவதாக பழங்குடியின மக்கள் அறிவிப்பு

மலைமாவட்டமான நீலகிரியில் தோடர், குரும்பர், இருளர், பனியர், காட்டு நாயக்கர், கோத்தர் என 6 வகையான பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இதில் தோடர் பழங்குடியின மக்கள் உதகை, கோத்தகிரி, குன்னூர், குந்தா உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள அடர்ந்த வனப் பகுதிகளை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு கால்நடைகள் மேச்சலுக்காக செல்லும்போது இரண்டு இளைஞர்களை புலித்தாக்கி கொன்ற சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது .மேலும் புலியை கூண்டு வைத்து பிடிக்க வனத்துறையிடம் பலமுறை முறையிட்டும், தற்போது வரை வனத்துறையினர்எவ்விதநடவடிக்கையும்எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர் மேலும் இரவு நேரங்களில் யானைகள் விவசாய நிலத்துக்குள் புகுந்து அட்டகாசம் செய்து வருவதாகவும் மேலும் குடியிருக்கும் பகுதிக்குள் உள்ள அடர்ந்த முட்புதர்கள் மற்றும் மரங்களை அகற்ற வேண்டும் எனவும் மேலும் வனவிலங்கு அச்சத்தால் குடியிருப்பு பகுதிக்குள் செல்ல பள்ளி மாணவ மாணவியர்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என கோரிக்கை வைத்தும் தற்போது வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் வேதனை தெரிவிக்கின்றனர் மேலும் மாவட்ட நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் எதிர்வரும் சட்டமன்ற தேர்தலை புறக்கணிப்பதாக கூறி தோடர் பழங்குடியினர் மக்கள் அறிவித்தனர்.

## தரை பாலம் திறந்து வைத்த கவுன்சிலருக்கு பொதுமக்கள் பாராட்டு



திருப்பூர் மார்ச் 26

பிச்சம் பாளையம். திருப்பூர் மாநகராட்சி 16 வது வார்டு பிச்சம்பாளையம் புதுார் நால் ரோடு சந்திப்பில் மழைக்காலங்களில் சுமார் இரண்டு அடி தண்ணீர் தேங்கி நிற்கும் இதனால் அங்கேரிபாளையம் ஸ்ரீநகர் மற்றும் பிச்சம்பாளையம் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் வேலைக்கு செல்வது மற்றும் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் மழைக்காலங்களில் மிகுந்த அவதிப்பட்டு வந்தனர். கடந்த 3 மாதங்களுக்கு முன்பு 15 லட்சம் மதிப்பீட்டில்மழைநீர் வடிகால் மற்றும் தரை பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வந்தது. இதனால் அவ்வழியாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு மாற்று வழியில் பொது மக்கள் சென்று வந்தனர் பணிகள் நிறைவடைந்த நிலையில் திறப்பு விழா காணாமல் அவ்வழிப்பாதை அடைக்கப்பட்டு இருந்த நிலையில் இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்தது அதனை 16 வது வார்டு மாமன்ற உறுப்பினர் தமிழ்ச்செல்வி கனகராஜ் முன்நின்று இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் வழியாக செல்ல ஏதுவாக பணிகளை மேற்கொண்டார் இதனால் பிச்சம் பாளையம் ஸ்ரீ நகர் அங்கேரி பாளையம் செல்லும் பாதையான நால் ரோட்டில் தரைப்பாலம் கட்டி பயன்பாட்டுக்கு வந்ததை பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்ததாக தெரிவித்தனர் மேலும் கடந்த 25 ஆண்டு காலமாக மழைக் காலங்களில் தங்கள் பட்டு வந்த இன்னல்களில் இருந்து விடுபட்டதாகவும் தெரிவித்தனர்...

### கோவை மாவட்டத்தில்

## 2 கிலோ 400 கிராம் கஞ்சா பறிமுதல் செய்த கோவை மாவட்ட காவல்துறையினர்



கோவை மார்ச்:26

சமூகத்தின் நச்சாக விளங்கும் போதைப் பொருட்களின் பயன்பாட்டை முற்றிலும் ஒழித்து,போதைப்பொருள் இல்லாத கோவையை உருவாக்கும் பொருட்டு கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் கே கார்த்திகேயன் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார். அதன் அடிப்படையில் பேரூர் காவல் நிலைய காவல்துறையினர்★ குற்ற சம்பவம் நடக்காமல் கண்காணிக்க வேண்டி ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, கஞ்சா விற்பனைக்கு வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் காவல்துறையினர் ராமசெட்டிபாளையம் அருகில் சென்று சோதனை மேற்கொண்ட போது கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்த செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த குணசேகரன் மகன் சரவணன் (24),பேரூர் பகுதியைச் சேர்ந்த சீனிவாசன் மகன் விக்னேஷ் (22) மற்றும் மணிகண்டன் மகன் ஹரி ராகவேந்திரன் ஆகியோர்களை கைது செய்து அவர்களிடமிருந்து சுமார் 2 கிலோ 400 கிராம் கஞ்சா மற்றும் இரண்டு சக்கர வாகனம்1 ஆகியவற்றை பறிமுதல் செய்து மேற்படி நபர்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். இதுபோன்று போதைப் பொருட்கள்விற்பனையில்ஈடுபட்டாலோ அல்லது சட்ட ஒழுங்கிற்கு எதிராக செயல் பட்டாலோ,ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என காவல் கண்காணிப்பாளர் எச்சரித்துள்ளார்.

## பாலக்கோடு சட்டமன்ற தொகுதி அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் கே பி அன்பழகன் அறிவிப்பு



தருமபுரி மார்ச் 26

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சட்டமன்ற தொகுதி அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் கே. பி. அன்பழகன் வேட்பாளராக தலைமை கழகம் அறிவித்துள்ளது. கே.பி. அன்பழகன் 30 4 1958 அன்று பிறந்தார். கல்வித் தகுதி பி. யு .சி, எம். பி. சி. வன்னியர் இனத்தை சார்ந்தவர். இவரது தந்தையின் பெயர் கே.டி. பச்சையப்பன், 1 / 136 A கெரகோட அள்ளி கிராமம், காரிமங்கலம் வட்டம், தருமபுரி மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருகிறார். இவர் தற்பொழுது அதிமுக தலைமை கழகத்தில் கழக அமைப்பு செயலாளர் , தருமபுரி மாவட்ட கழக செயலாளர் ஆகிய பொறுப்புகளில் இருந்து வருகிறார். இவர் அதிமுகவில் 1978 ம் ஆண்டு இணைந்து கழகப் பணியாற்றி வருகிறார். இவர் 1996 மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். மேலும் 2001 , 2006, 2011 , 2016 , 2021 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் பாலக்கோடு தொகுதியில் தொடர்ந்து வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினர் பதவி வகித்து வருகிறார். 2003 2006 ஆகிய ஆண்டுகளில் செய்தி விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக பணியாற்றி வந்தார். 2016 2021 ஆகிய ஆண்டுகளில் உயர் கல்வித் துறை மற்றும் வேளாண்மை துறை அமைச்சராக பணியாற்றி வந்தார். இவர் தற்போது பாலக்கோடு சட்டமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற எதிர்க்கட்சி செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்து வருகிறார். தலைமை கழகத்தில் ஏற்கனவே மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர், காரிமங்கலம் ஒன்றிய கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகளில் இருந்து வந்தார்.

## பொய்கை காட்டில் வேட்டைக்கு சென்ற இருவருக்கு தலா ரூ.50 ஆயிரம் வீதம் அபராதம்

### வனத்துறை நடவடிக்கை



கன்னியாகுமரி, மார்ச்.26

குமரி மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் முனைவர் அ. அன்பு உத்தரவின் படி, உதவி வனப் பாதுகாவலர் மற்றும் உதவி இயக்குனர் ஸ்ரீ வல்சன் வழிகாட்டுதலின் படி , பூதப் பாண்டி வனச்சரக அலுவலர் அன்பழகன் தலைமையில் வனத்துறையினர் குமரி, பொய்கை காட்டில் நேற்று முன்தினம் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அவருடன் ஆரல்வாய்மொழி பிரிவு வனவர் மணிகண்டன், வனக்காப்பாளர்கள் வனஜா, முத்துராமலிங்கம், முத்துக்குமார், தீபா மற்றும் வன காவலர்கள் சிவா, புஷ்பராஜ், பிரவீன் ஆகியோர் உடன் வேட்டை தடுப்பு காவலர்கள் விஜி, தனுஷ் ஆகியோர் அடங்கிய குழு இரவும் பகலும் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது பொய்கை காப்புக்காடு பகுதியில் அத்துமீறி நுழைந்து வேட்டைக்கு வந்த இரண்டு நபர்களை மடக்கி பிடித்தனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அவர்கள் ஆரல்வாய் மொழி பகுதியை சேர்ந்த பிரகாஷ் (24), சுரேஷ் (40) என தெரிய வந்தது. மேலும் அவர்கள் காட்டில் வேட்டையாட முயன்றது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து மாவட்ட வன அலுவலரின் உத்தரவின்படி, குற்றவாளிகளுக்கு தலா ரூ.50 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் ஒரு லட்ச ரூபாய் இணக்க கட்டணம் விதிக்கப்பட்டது.

இதுபோல் காட்டிற்குள் அத்துமீறி வேட்டையில் ஈடுபடுபவர்கள் மீதும், வனத்தீ ஏற்படுத்துபவர்கள் மீதும் கைது செய்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று வன அதிகாரிகள் எச்சரித்தனர்.

### ஈரோட்டில்

## தேர்தல் பறக்கும் படை சோதனையை குறைக்ககோரி அனைத்து தொழில் சங்க கூட்டத்தில் தீர்மானம்




ஈரோடு, மார்ச் 25

ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

கூட்டமைப்பின் தலைவர் ராஜமாணிக்கம் தலைமை தாங்கினார். கட்டிட பொருள் விற்பனையாளாக்ள் சங்கத்தின் தலைவர் இளங்கோ வரவேற்றார். பைனான்ஸ் அசோசியேஷன்தலைவர்முத்துசாமி முன்னிலை வகித்தார். பொருளாளர் முருகானந்தம் நிதி அறிக்கை வாசித்தார். சிறப்பு அழைப்பாளராக இந்து கல்வி நிலைய செயலாளர் அருண்குமார் பாலுசாமி பங்கேற்று, பேசினார். இந்த கூட்டத்தில், ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பினர், இணை சங்கத்தினர், அவர்களது நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள், குடும்பத்தினர் அனைவரும் வருகிற சட்டமன்ற தேர்தலில் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும். நாடு முழுவதும் விலைவாசி உயர்வினால் தேர்தல் நடத்தை விதிமுறைகளால் பொதுமக்கள் கையிருப்பில் ரூ.50 ஆயிரம் வைத்திருக்கலாம் என்ற தொகை குறைவாக உள்ளதால், அதனை ரூ.1 லட்சம் வரை அதிகரித்திட தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பறக்கும் படை, நிலைக்கண்காணிப்பு குழு சாதாரண பொது மக்கள், அவர்களது வீட்டு சுப நிகழ்ச்சிகளுக்கு பொருட்களை வாங்க செல்லும்போதும், வாங்கி விட்டு வரும் போதும் சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் மர்மநபர்களை சோதனை செய்வது போல நடத்துகின்றனர். இதனால், இது போன்ற சோதனைகளை குறைத்து கொள்ள வேண்டும். விவசாய விளைபொருட்களை கொண்டு செல்பவர்களையும், அதனை கொள்முதல் செய்பவர்களையும் சோதனை செய்வதால் கடும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். ஊராட்சிக்கோட்டை குடிநீர் விநியோகம் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், சீராக குடிநீர் விநியோகிக்கப்படுவதில்லை. மக்கள் நலன்கருதி ஊராட்சிக்கோட்டை குடிநீர் விநியோகத்தை மாநகராட்சி நிர்வாகமே செயல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டது. இந்த கூட்டத்தில் பொதுசெயலாளர் ரவிச் சந்திரன், இணை செயலாளர் மூர்த்தி மற்றும் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் செயற்குழு கூட்டத்தில் தலைவர் ராஜமாணிக்கம் பேசினார்.

### கோவை மாவட்ட அரிமா சங்கத்தின் இந்த ஆண்டுக்கான நிர்வாகிகள் தேர்வில்

## வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்த சங்க நிர்வாகிகள்




கோவை மார்ச்:26

கோவைமாவட்டம்அரிமா சங்கம் 3241D வருடாந்திர ஆளுநர்/முதல்நிலைமற்றும் இரண்டாம் நிலை துணை ஆளுநர் பதவிகளுக்கான வாக்குப்பதிவு மார்ச் 22 அன்று இந்த ஆணடிற்கான நிர்வாகிகள் தேர்வு அன்னூர் அருகே குப்பேபாளையம் பகுதியில் உள்ள லயன்ஸ் கிளப்ஹாலில்நடைபெற்றது. இதில் காரமடை அரிமா சங்கத்தின் மூலம் இரண்டாம் நிலை துணை ஆளுநர் பதவிக்காக போட்டியிட்ட கே.பி.வி.கோவிந்தன் 98% வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். மேலும் ஆளுநர் பதவிக்கு பாரதியும் முதல் நிலை துணை ஆளுநர் பதவிக்குராதிகாமதுவும்வெற்றிபெற்றனர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் பன்னாட்டு இயக்குனர்கள் ஜி.ராமசாமி, சம்பத், தற்போதைய ஆளுநர் தினகரன், காரமடை அரிமா சங்க நிர்வாகிகள் தலைவர் எஸ். செல்வராஜ், செயலாளர் பீ.விமல்குமார், பொருளாளர் ஆர்.தங்கவேல், உறுப்பினர்கள் ராமசாமி, சோனி ராமசாமி, சண்முகசுந்தரம், பாபு, குமரேசன், டாக்டர் ஜெயராமன், கணேசன் மற்றும் முன்னாள் ஆளுநர்கள், நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு இத்தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்குதங்களதுவாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.


## மீனச்சல் ஸ்ரீகுறுஞ்சேரி பகவதி அம்மன் காவு மஹா கும்பாபிஷேகம்



களியக்காவிளை, மார்.26

களியக்காவிளைஅருகேமீனச்சல் கிராமத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த குறுஞ்சேரி பகவதி அம்மன் காவு புனரமைப்பு பணிகள் நிறைவடைந்து விக்ரக பிரதிஷ்டை மற்றும் மஹா கும்பாபிஷேகம் ந டை பெ ற் ற து . முன்னதாக கடந்த 23 தேதி முதல் கணபதி ஹோமம், ஆச்சார்ய வர்ணம்,பிராசாத சுத்தி , வாஸ்து கலசம், வாஸ்து பலி ஜலாதி வாசம் உட்பட பல்வேறு பூஜைகள் நடைபெற்று வந்தது. கோயில் தந்திரி தலைமையில் பகவதி அம்மன், நாகர், கணபதி விக்ரகங்கள் பிரதிஷ்டை செய்து தொடர்ந்து யாக குண்டத்தில் பூஜிக்கப்பட்ட புனித நீரை வேத பண்டிதர்கள் மந்திரங்கள் ஓதி மேளதாளம் முழங்க ஆலயத்தை வலம் வந்து கோயில் கருவறைகோபுரகலசங்களுக்கும்,,கணபதி உட்பட உப கோயில் கும்ப கலசங்களில் புனித நீரை ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது தொடர்ந்து சிறப்பு தீபாராதனை நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் வெள்ளிமலை இந்து தர்ம வித்யா பீடம் சாமி சைதன்யானந்த மகாராஜ் உட்பட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## திருச்சி: வாக்குபதிவு இயந்திரங்களை அனுப்பும் பணி தீவிரம்



திருச்சி, மார்ச். 26

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, திருச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்பது சட்டமன்ற தொகுதிகளுக்கும் மின்னணுவாக்குப்பதிவுஇயந்திரங்கள் அனுப்பும்பணிநடைபெற்றுவருகிறது. ஒவ்வொரு தொகுதிக்கும் உட்பட்ட தாலுக்கா அலுவலகங்களுக்கு வாகனங்கள்மூலம்இந்தஇயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. பின்னர், பாதுகாப்புஅறைகளில்வைக்கப்பட்டு, பூட்டி சீல் வைக்கப்பட்டன. தேர்தல் பணிகளின் இந்த முன்னேற்றம், தேர்தலுக்கான ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளதைக் காட்டுகிறது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.